சிந்தனை
தொகுதி VI
இதழ் I & II, 1994

# திருக்குறளில் 'ஊழ்'

கலாநிதி நா. சுப்பிரமணியன்

## தோற்றுவாய்

இந்தியா உலகுக்கு அளித்த சிந்தனைச் சிகரங்களில் ஒன்று திருக்குறள். "இந்த நூலுக்கு இணையாகச் சுட்டக் கூடிய மெய்யுணர்வுத் தொகுப்பொன்றை உலக இலக்கிய பரப்பிலே காண்பதரிது" என்பது ஜெர்மனிய அறிஞர் அல்பர்ட் சுவைட்சர் அவர்களது கணிப்பு.[1] இந்நூல் தான் எழுந்த காலப்பகுதியிலே மரபாகப் பேணப்பட்டு வந்த வாழ்வியற் கூறுகளில் விழுமியவற்றைப் பேணிக் கொண்டது; பொருந்தாதவை எனத்துணிந்தவற்றைக் கண்டித்தது; மரபுசார் நடைமுறைகள், சிந்தனைகள் என்பவற்றிற் சிலவற்றை விமர்சிப்பதன் ஊடாக அக்காலப் பகுதியிற் புரட்சிகரமானவை எனத்தக்க எண்ணங்களை முன்வைத்தது. இவற்றின் மூலம் தமிழர் பண்பாட்டில் மட்டுமன்றி அனைத்திந்திய பண்பாட்டிலும் ஒரு திருப்புமுனை ஏற்படுத்திய நூலாகவும் அது திகழ்கின்றது. இவ்வாறு திருக்குறள் திருப்புமுனை ஏற்படுத்திய கூறுகளுள் ஒன்று 'ஊழ்' தொடர்பான சிந்தனை ஆகும். இதனைத் தெளிவுறுத்தும் முயற்சியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

இவ் வகையில் முதற்கண் 'ஊழ்' என்ற சொல் குறித்து நிற்கும் பொருண்மை நமது கவனத்துக்கு உரியதாகிறது.

## ஊழ் – பொருள்விளக்கம்

இச் சொல்லுக்கு, பழைமை, பழவினை, பழவினைப்பயன், முறைமை, குணம், தடவை, முதிர்வு, முடிவு. பகை, மலர்ச்சி, சூரியன் ஆகிய பொருள்களை அகராதியாளர் குறிப்பிடுவர்.[2] பொது வழக்கிலே இச்சொல் செயலுக்கும் அதன் விளைவுக்கும் உள்ள உறவுநிலை (காரண காரியத் தொடர்பு) என்ற அடிப்படையில் பழவினைப்பயன் என்ற பொருளிலே மிகுபயிற்சி பெற்றுள்ளது. இதனை 'ஊழ்வினை' எனவும் வழங்குவர். இதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு கோட்பாடே உருவாகியுள்ளது. அதற்கு ஊழ்வலிக் கோட்பாடு என்று பெயர். இந்திய தத்துவவியலார் இதனை, 'கர்மம்', 'விதி' ஆகிய வட சொற்களாலும் வழங்குவர். ஒருவரது பிறப்பு, வாழ்க்கை நிலை, செயலூக்கம் இன்பதுன்ப அநுபவங்கள் ஆகிய அனைத்தும் அவரது முற்செயல்களின் விளை பொருள்களே என்பது இக் கோட்பாட்டின் தெளிபொருள்.

முற்செயல் என்பது (ஒரு பிறப்பில்) தொடக்கத்தில் செய்தவற்றையும் சுட்ட வல்லது. ஆனால் பிறப்பு முதலிய அனைத்து நிலைகளுக்குமான முற்காரணத்தை ஒரு பிறப்பில் காட்டுவது சாத்தியமில்லை என்ற சிந்தனையின் அடிப்படையில் முற்பிறவி என ஒன்று இருந்திருக்க வேண்டும் என்ற கருத்து உருவானது. ஒரு

வர் தாம் செய்யும் செயற்பலன் அனைத்தையும் அப்பிறப்பில் துய்த்தல் சாத்தியமில்லை என்ற எண்ணம் மறுபிறப்பு என்ற சிந்தனையைத் தந்தது. இவ்வாறு செயலின் விளைவு – வினைப்பயன் – என்ற எண்ணமும் மறுபிறப்பு என்ற கருத்து நிலையும் ஒன்றுடனொன்று சார்ந்து சங்கிலித் தொடர்போல – அமைந்துள்ளன. ஊழ்வலிக் கோட்பாட்டின் விளக்கநிலை இது.

''ஊழ்வலிக் கோட்பாடு அனைத்தும் பழவினைகளால் முதலிலேயே தீர்மானிக்கப் படுகின்றன என்பதை விளக்குவதாகும்.....

வாழ்க்கையில் சிலர் எவ்வளவோ முயற்சி செய்தும் வெற்றி பெறாமல் துன்புறுகின்றனர். சிலர் பெருமுயற்சி செய்யாமலே பெரும்பயன் எய்துகின்றனர். இதற்கு முன்வினைப்பயன்தான் காரணம் என்று கூறவேண்டியிருக்கிறது''.[3] என இக்கோட்பாட்டுக்கு விளக்கம் தருவதோடு அதனை நியாயப்படுத்தவும் முற்படுகின்றது.

வாழ்வியற்களஞ்சியம்.

ஊழ் என்ற சொல் தொல் தமிழ் மரபில் வழங்கி வந்த பொருட்பரப்பை ஆராய்ந்துள்ள டாக்டர். பெ. சுப்பிரமணியன் அவர்கள், அச்சொல் தொடக்கத்தில் உலகியல் நிலையில் இயற்கைப் பொருள்கள், நிகழ்வுகள் என்பவற்றைச் சுட்டி நின்று, நாளடைவிலே (பழ) வினை என்ற பொருள் நிலையை எய்தியது என்ற ஊகத்தை முன்வைத்துள்ளார். அதனை அவரது சொற்களிலேயே காண்போம்.

'ஊழ் என்னும் சொல் தொடக்கத்தில் உலகியல் நிலைகளில் இயற்கைப் பொருள்களை, நிகழ்வுகளைச் சுட்டும் பொருளில் வழங்கியது. பெரும் பான்மையும் மலர்தல், முதிர்தல், தோன்றுதல், சிறத்தல் ஆகிய பொருட்களில் ஆட்சி பெற்றது........ மலரும் நிலையிலுள்ள மலரின் செவ்வியையும் கனியும் நிலையிலுள்ள பழத்தின் பருவத்தையும் ஊழ் என்ற சொல் சுட்டுவதைச் சங்க நூல்களில் காணமுடிகிறது.

ஊழ் என்பதற்கு பான்மை – தன்மை ஆகிய பொருள்களும் உள்ளன. ஒரு பொருளின் இயல்பை உணர்த்தும் வகையில் இச்சொல் பான்மை, மரபு, முறை ஆகிய பொருட்களில் வழங்கியிருக்கலாம். ஒரு பொருளின் உடனாகவே நுண்மையாக இருந்து உரிய பருவம் வரும்போது வெளிப்படும் ஆற்றலைக் குறிக்கும் சொல்லாக இதனைக் கொள்ளவும் இடமுண்டு.

...உறை, உறைத்தல், பால் ஆகிய சொற்களும் ஊழ் என்னும் சொல்லுடன் நெருங்கிய உறவுடையன. உறை, பால் என்னும் பொருளுடையன. ஆகவே ஒன்றின் பக்கத்தில் உடனாகவே இருந்து உரிய காலத்தில் வெளிப்படும் ஆற்றலை ஊழ் எனக்குறிப்பிட்டனர். வித்து நிலையிலிருந்து விளைவு நிலைக்குவரும் பாவத்தினைக் குறித்த இச்சொல் காலப் போக்கில் விளைவிற்குரிய ஆற்றலுக்கு ஆகுபெயராய் மாறி ஊழாற்றலைக் குறித்துள்ளது.

...நிகண்டுகள் கூறும் பொருளடிப்படையில் காணும்போது ஊழ் என்னும் சொல் தன்மை, இயல்பு, மரபு ஆகியன போன்ற பண்புப் பெயர்ச் சொல்லாக இருந்து செயலைக்குறிக்கும் வினை, விதி, தருமம் ஆகிய பொருள்களை உணர்த்துவதாக மாறியிருக்கவேண்டுமென்று தெரிகிறது.''[4]

இவ்வாறு பொருள்மாற்றம் எய்திவந்த ஊழ் என்ற சொல் குறித்து நிற்கும் வினை (விதி – கருமம்) என்ற பொருண்மைக்கும் ஒரு நீண்டவரலாறு உளது. வடமொழியிலே காலமுதன்மையுடையதான இருக்கு வேதப்பாடலில் இப்பொருண்மை தோற்றம் கொள்ளத் தொடங்கி விட்டது. உடல் அழியும் காலத்திலே உயிர் அழிவதில்லை

எனவும் அது தான் செய்த செயல்களின் இயல்புக்கு ஏற்ப நரகம் அல்லது மோட்சம் எய்துகின்றதெனவும் அக்கால மக்கள் நம்பினர்.[5] வேதஇலக்கியப்பரப்பின் இறுதிப் பகுதியான உபநிடதங்களில் செயலுக்கு ஏற்ப மறு பிறப்பு அமைகின்றது என்ற கருத்து நிலை உருவாகிவிட்டது.[6] பின்னர் உருவான சமய - தத்துவப் பிரிவுகள் பலவற்றிலும் இச் சிந்தனை செல்வாக்குச் செலுத்தியது. இப்பிரிவுகள் பலவற்றிற்கும் பொதுவான அடிப்படைக் கோட்பாடுகளிலொன்றாக பழவினைக்கோட்பாடு - கர்மக் கோட்பாடு - அமைந்தது. சைவம், வைணவம், சமணம்; பௌத்தம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் ஆகியன மறுபிறப்புண்மையை ஒப்புக் கொள்கின்றன.[7]

இவ்வாறு உருவாகி நிலைத்த மேற்படி கோட்பாடு, தமிழர் பண்பாட்டிலும் தொல்லிலக்கியமான சங்கஇலக்கிய காலப்பகுதியிலேயே இடம்பெறத் தொடங்கிவிட்டது.

> ''அருளும் அன்பும் நீங்கி நீங்கா
> நிரயம் கொள்பவர்'' (புறநானூறு :5)

> ''மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
> தென்புலங்காவலில் னொரிகிப் பிறர்
> வன்புலங்காவலின் மாறியான்
> பிறக்கே'' (புறநானூறு: 71)

> "நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
> செல்வம் அன்றுதன் செய்வினைப்
> ப்யனே" (நற்றிணை: 210)

முதலியவற்றில் இதனை அவதானிக்கலாம். இவ்வாறு இடம்பெறத்தொடங்கிய இக் கோட்பாட்டுச் சிந்தனை நாளடைவிலே 'ஊழ்', 'ஊழ்வினை' ஆகிய சொற்களைத் தனக்கு உடைமை ஆக்கிக் கொண்டது.

இவ்வாறான வரலாற்றுப் போக்கில் திருக்குறள் கூறும் 'ஊழ்' குறிக்கும் பொருண்மை யாது? என்பது நமது முன் நிற்கும் முக்கிய வினாவாகும்.

## திருக்குறள் கூறும் 'ஊழ்' அதிகாரம்

திருக்குறளில் ஊழ் என்ற தலைப்பிலே தனி அதிகாரம் உளது. அறத்துப்பாலின் இறுதியில் அது அமைந்துளது. இந்த அதிகாரத்துக்குப் புறம்பாகவும் 'ஊழ்' என்ற சொல்லாட்சி உளது. (உ-ம் குறள் 620)

ஊழ் அதிகாரம் சுட்டிநிற்கும் பொதுப் பொருண்மை தொடர்பாகவும் அதில் அமைந்துள்ள குறள்களின் பொருண்மைகள் தொடர்பாகவும் உரையாசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. பண்டைய உரையாசிரியர்களான பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார் ஆகியோர் இந்த அதிகாரம் பழவினை - ஊழ்வலிக்கோட்பாடு - தொடர்பானது என்று கொண்டனர்

> ''அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி.''[8]

எனப் பரிமேலழகரும்,

> ''ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விளையும் முறை''[9]

என மணக்குடவரும்,

> ''ஊழாவது போன சென்மத்தின் வினைப் பயனைச் சொல்லியது''[10]

எனப் பரிதியாரும் இந்த அதிகாரத்துக்கு அறிமுகக் குறிப்புத் தந்துள்ளனர். இவ்வாறு இவ்வதிகாரத்தை வினைப்பயன் கோட்பாடுடன் தொடர்புபடுத்தி அமையும் கருத்து நிலை பிற்கால உரையாசிரியர்கள் பலராலும் ஆய்வாளருள் ஒருசாராராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுப் பேணப்பட்டு வருகின்றது. பிற்கால உரைகாரர், ஆய்வாளர் என்போருள் ஒரு சாரார் 'வினைப்பயன்' என்பதற்குப் பதிலாக பொதுவாகப் 'உலக முறைமை' 'உலகச் சூழ்நிலை' 'அறம்' என்பனவாகப் பொருள் கொள்வர், அத்தகு சிந்தனைகளிற் சில :-

> ''ஊழ் என்பது உலகச் சூழ்நிலை. அஃது ஒருவனுக்கு நன்று தீது ஆகிய இரு திறமும் செய்யவல்லது.'' [11]

என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

> ''ஊழ் முறைமை; உலகியல் நிகழும் முறைமை:
>
> உலகியலின் இயற்கை நிகழ்ச்சி, அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும் சுற்றுச்சார்பின் தகுதியும் நம் எண்ணத்தின் முயற்சியின், செயலின் தகுதிக்கு ஒத்துவருதலும் ஒவ்வாது வருதலுமாம்............மக்களின் எண்ணம் முதலியவற்றினுள் அடங்காமல் அப்பாற்பட்டு இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி ஊழ் எனப்படும். அந்நிகழ்ச்சியின் போக்கில் நாம் செய்வன ஆகும். அதற்கெதிரிடையாகச் செய்வன ஆகா'' [12]

என்பது புலவர் குழந்தையவர்கள் சிந்தனை.

> ''ஊழ்வேறு. ஊழ்வினைவேறு: ஊழ் என்பது முறைமை. மறுபிறப்புக் கொள்கைக்குச் செல்வாக்கு ஏற்பட்ட பின்னர், முற்பிறப்பு வினையின் பயன் இப்பிறப்பில் முதிர்வதை முறைமையின் வெளிப்பாடாகக்கண்டு அதனை ஊழ்வினைப் பயன் என்றனர். பழவினையை ஊழ்வினை என்றாரேயன்றி ஊழ் என்றார் இலலை. [13]

என ஊழ், ஊழ்வினை ஆகிய இரண்டின் பொருள்நிலை வேறுபாட்டினை விளக்கும் டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள்.

> ''...வள்ளுவத்தின் ஊழ், அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து. (Mystic-Conception) அதில் இறைமை உண்டென்பது வள்ளுவரின் குறிப்பு. பல இயற்கை நிகழ்ச்சிகளின் முறைமையை விஞ்ஞானரீதியாகப் புரிந்து கொள்ள முடியாத சமுதாயத்தில் தோன்றிய கருத்து இது... உலகத்தில் அறம் நிலவுகிறது. அதுவே இயற்கை; அதுவே ஊழ் அல்லது தெய்வம்...'' [14]

என்ற கருத்தை முன்வைக்கிறார். அத்துடன் வள்ளுவரின் ஊழ் என்பதைச் 'சூழ்நிலை' என்ற பொருளில் விளங்கிக் கொள்வது பிழையாகும் என்றும் கூறுகிறார். [15]

டாக்டர் மு. வரதராசனார், ''உலகத்தின் பொது ஒழுங்கான ஆட்சிமுறையை ஊழ் எனச் சான்றோர்கள் குறித்தனர்'' என்பர். [16]. ''ஊழும் வினைப்பயனும் வேறு வேறு ஆற்றல்கள; இவையிரண்டிற்கும் ஒரு நொய்ய தொடர்புண்டு'' என்பது பன் மொழிப்புலவர் கா. அப்பாத்துரையாரின் சிந்தனை. [17]

மேற்படி சிந்தனைகளின் ஏற்புடைமையைத் தெளிந்து கொள்வதற்கு முதற்கண் ஊழ் அதிகாரத்தின் குறள்களை நேரே அணுகவேண்டும்.

இந்த அதிகாரத்தின் முதல் மூன்று குறள்கள், ஒருவரது செயலூக்கம், அறிவாற்றல் என்பன ஊழின் அடிப்படையிலேயே தொழிற்படுவன என உணர்த்துவன.

> நல்ல ஊழ் (ஆகூழ், ஆகலூழ்) அமைந்தால் செயலூக்கம் மிகும்; அறிவு விரித்து தொழிற்படும். தீய ஊழ் (போகூழ், இழவூழ்) அமையின் சோம்பல் உண்டாகும்: அறிவு சுருங்கிப் பேதைமை ஏற்படும். (1, 2) நுட்பமான நூல்கள் பலவற்றைக்கற்றலும் (ஊழானாகிய) உண்மையறிவே மிகுந்து தொழிற்படும்.

அடுத்த இரண்டு குறள்களில் உலக இயல்பிற் காணப்படும் முரண்பாடுகளுக்கு ஊழே அடிப்படை என்பது உணர்த்தப்பட்டுள்ளது.



UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

உலகம் இருவேறுபட்ட இயல்புகள் கொண்டது. சிலர் செல்வமுடையோரா யுள்ளனர்; வேறு சிலரிடம் கல்வியறிவு உள்ளது. (4)

செல்வம் சேர்ப்பதான முயற்சிக்கு நல்ல வழிகள் எனப்படுபவை தீமைபயத் தலும் உண்டு; தீய வழிகள் எனப்படுபவை நன்மை பயத்தலும் உண்டு. (5)

அடுத்து அமைந்துள்ள இரண்டு குறள்க ளில், ஊழால் தரப்படுவனவற்றை விலக் கவோ அன்றேல் தரப்படாதவற்றை அநு பவிக்கவோ முடியாது என்பது கூறப்பட் டுள்ளது.

(ஊழின்படி) அநுபவத்துக்குரியன அல்லாதவற்றைப் பேணிக்காத்தாலும் அவை பயன்படப்போவதில்லை. அநுபவித் தேயாக வேண்டியவற்றைப் புறத்தே விலக் கினாலும் அவை நீங்கமாட்டா. (6)

கோடி கோடியாகத் தொகுத்து வைத் திருந்தாலும் ஊழ்(வகுத்தான்) வகைப்ப டுத்தித்தந்த முறையிலன்றி அவற்றை அநு பவிதத்ல் சாத்தியமில்லை. (7)

அடுத்த குறள் வறியவர்கள் துறவிகளாகா மைக்குக் காரணம் ஊழ் என்பதை உணர்த் தும். நுகர்தற்குரிய பொருளற்ற வறியோர் (ஊழானாகிய) அநுபவிக்க வேண்டிய துன்பங்களை அநுபவித்துக் கழிக்கவேண் டிய நிலை காரணமாகவே துறவுபூண முடி யாதவர்களாய் உள்ளனர். அல்லாவிடின் துறவு பூண்டிருப்பர். (8)

அடுத்தகுறள் ஊழினால் வரும் இன்ப துன்ப அநுபவங்களால் மன அமைதி பாதிக் கப் படலாகாது என்பதை உணர்த்துவது.

(ஊழினால்) நன்மை வரும்போது அவற்றை விலக்காது அநுபவிப்போர் துன் பம் வரும்போது மட்டும் அதனைத் துடைத் தற்கு வழிதேடி அல்லல் உறுவது ஏன்? (9) என்ற வினாவில் மேற்படி அநுபவங்களால் பாதிக்கப்படாத் நடுநிலை உளப்பாங்கு அவசியம் என்பது உட்பொருளாக உள்ளது.

இறுதிக்குறள் ஊழின் வல்லமை பேசு வது; அதனை விலக்குவது சாத்தியமில்லை என்பதை உணர்த்துவது.

ஊழைவிடப் பெருவலியுடையனவாக யாவுள?

ஏதாவது உபாயத்தால் அதனை மீறு தற்கு முற்படும் பொழுதும் அது (மீறப் பட முடியாதவகையில்) தானே முன் வந்து அநுபவத்துக்கு உரியதாக அமை யும். (10)

மேற்கண்ட குறள் விளக்கங்கள் பெரும் பாலும் பரிமேலழகர் உரையை ஒட்டியே தரப்பட்டுள்ளன. சில குறள்களுக்கு உரை கொள்வதில் பரிமேலழகருடன் ஏனையோர் பலர் முரண்படுகின்றனர். மூன்றாம் குற ளில் அமையும் 'உண்மை அறிவு' என்ற தொடருக்கு பரிமேலழகர் தரும் உரை.

'ஊழானாகிய பேதைமையுணர்வு' [18] என்பதாகும். மணக்குடவர்,

'இயல்பாகிய அறிவு' [19]

எனவும், புலவர் குழந்தை அவர்கள்,

'இயற்கை அறிவு' [20]

எனவும் பொருள் கொள்வர். அதிகாரம் ஊழ்பற்றியது ஆதலின் பரிமேலழகர் ஊழ டன் உண்மைக்கு இயைபு காண்கிறார் என ஊகிக்கலாம். புலவர் குழந்தையவர்கள் ஊழ் என்பதை இயற்கை நிகழ்ச்சி என்ப தோடு இணைத்துப் பொருள் கொள்பவர் என்பதால் உண்மையை இயற்கை எனப் பொருள் கொண்டார் எனலாம்.

'இருவேறுலகத்தியற்கை' என்ற நான் காம் குறளின் தொடருக்கு பரிதியார் சுட்டும் 'இரண்டு வகைப்படும் செல்வம்' என்ற கருத்து பொருந்துமாறில்லை என் பதை முனைவர் இரா. சாரங்கபாணி அவர்கள் தக்கவாறு மறுத்துள்ளார்.[21]

ஏழாவதாகிய 'வகுத்தான் வகுத்த வகை' என்ற குறளில் 'வகுத்தான்' என்

பதற்குப் பரிமேலழகர் 'தெய்வம் எனப் பொருள் சொண்டார்.[22] தெய்வம் என்பதால் அவர் ஊழையே குறித்தார் என அமைதி கொள்ளலாம். 'வகுத்தான்' என்பதற்கு திருக்குறளார் முனுசாமி அவர்கள்,

> 'இக்குறட்பாவில் ஊழின் அமைப்பைக் கூறவந்த ஆசிரியர் திருவள்ளுவனார் அந்த ஊழினை உருவகமாகச் சொல்லி 'வகுத்தான்' என்று உயர்திணையாகக் கூறினார். இது ஒரு மரபு. அப்படி ஒருவன் இருந்து கொண்டு வகுத்து அமைக்கிறான் என்பது பொருளல்ல... காமம் என்ற உணர்ச்சியைக் காமன் என்று சொன்னது போல, இயற்கையின் நிகழ்ச்சியினைப் பகுப்பு—வகுப்பு முறையினை உருவகப்படுத்தி 'வகுத்தான்' என்று கூறினார்'[24]

என விளக்கம் தருவர். வகுத்தான் என்பதற்கு 'அரசன்' எனப்பொருள் கொள்வோரும் உளர் எனச்சுட்டும் முனைவர் இரா. சாரங்கபாணியவர்கள், ஊழ் அதிகாரமாதலின் இயற்கை அல்ல ஊழ் என்று 'வகுத்தானுக்குப்' பொருள் கொள்வதே இயல்பாகும் என்று கூறி மேற்படி முனுசாமி அவர்களின் பொருள் தெளிவுடையது என்பர்.[25]

மேலே நோக்கப்பட்ட பத்துக் குறள்களிலும் எவ்விடத்திலேனும் வினை, ஊழ்வினை' கருமம் ஆகிய சொற்கள் இடம் பெறவில்லை என்பதும் பதிலாக இயற்கை (4) பால் (6 - பரியினும் ஒவாவாம் பாலல்ல ......) ஆகிய சொற்கள் இடம்பெற்றுள்ளமையும் நமது கவனத்துக்குரியதாகும். ஊழ்வினை வேறு, வள்ளுவர் சுட்டிய ஊழ்வேறு என அறிஞர் சிலர் கருதியதற்கான அடிப்படைகளில் முக்கியமானவை இவை. தமிழர் பண்பாட்டில் பாரம்பரியமாக நிலவிவந்த ஊழ் என்ற சிந்தனையோடு ஒட்டி அவர்கள் பொருள் கொள்ள விழைந்தமை புலனாகின்றது. அப்படிப் பொருள் கொள்வது ஆய்வு முறைமைக்கு ஒத்ததே ஆயினும் அவ்வாறு கூறமுற்படும் பொருண்மைகள் வள்ளுவத்துக்குப் பொருந்தியுள்ளனவா என்பதே நம்முன் நிற்கும்வினா.

வள்ளுவர் கூறும் ஊழ் என்பது பொதுவான ''உலகச் சூழ்நிலை'' எனக் கொள்ள முடியாது என்பது டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்களது கருத்தால்[26] தெளியப்படும். அவர் வள்ளுவரின் ஊழிலே தெய்வம் என்ற அம்சமும் இணைந்துள்ளதாக - முறைமையில் இறைமையும் இயைந்ததாகத்தரும் விளக்கம்[27] இதனைத் தெளிவுறுத்தும்.

டாக்டர் மு. வரதராசன், புலவர் குழந்தை ஆகியோர் சிந்திக்க முயன்றுள்ள 'உலகியல் முறைமை' என்ற எண்ணக் கருவை டாக்டர் எஸ் இராமகிருஷ்ணன் சமுதாய வரலாற்று நோக்கில் தெளிவாக வளர்த்தெடுத்துள்ளமை தெரிகிறது. அவர் வள்ளுவர் கூறும் ஊழை, அறிவிற்கு அப்பாற்பட்டதும் இறைமை உள்ளதும் உலகத்தின் அறம் எனக் கொள்ளத்தக்கதுமான 'முறைமை' என விளக்கம் தந்துள்ளார். அவர் ஆராய்ந்து தெளிவுபடுத்திய முறையில் வள்ளுவரின் ஊழுக்கு அப்படி ஒரு கருத்துப்பரிமாணத்தைக் கொடுக்கலாம். ஆனால் அது வள்ளுவத்தை உரிய வகையில் விளங்கிக் கொள்வது ஆகுமா என்பதே இங்கு எழும் வினாவாகும்.

ஏனெனில், வள்ளுவருக்கு ஊழ்வலிக் கோட்பாடு தொடர்பான அறிவு இருந்திருக்கிறது. அவரே பல சந்தர்ப்பங்களில் வினைப்பயன், மறுமை, மறுபிறப்பு என்பன தொடர்பாகப் பேசியுள்ளார்.

> ''தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
> வீயா தடியுறைந் தற்று'' (208)

> ''அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த
> இன்னா உலகம் புகல் (243)

> ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
> நிலையாமை காணப் படும்'' (349)

முதலிய சில குறள்கள் இதற்குச் சான்றாகச் சுட்டத் தக்கன.

இவ்வாறு செயலுக்கும் அதன் விளைவுக்கும் உள்ள தொடர்பை நன்கு அறிந்திருந்த வள்ளுவர் 'ஊழ்' என்பதால் மனிதனைக் கட்டுப்படுத்தும் பிறிதொரு 'முறைமை' பற்றிக் கூறவந்தார் என்பது எந்த அளவுக்குப் பொருந்தும்? ஊழ் என்பதோடு வினை என்பதை இணைத்துக் கூறவில்லை என்பதால் ஊழ்வேறு, ஊழ் வினைவேறு என்று வேறுபடுத்தித்தான் பொருள் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் உள்ளதா?

வள்ளுவர் வினைப்பயனைப்பற்றிப் பேசியுள்ளார்; கடவுள் பற்றியும் பேசியுள்ளார் (கடவுள் வாழ்த்தில்). அறம் என்பது பற்றி தனி அதிகாரம (அறன் வலியுறுத்தல்) ஒன்றே அமைத்துள்ளார். மேலும் இல்லறம், துறவறம் என்றெல்லாம பல்வேறு வகைகளில் அவரது அறம் பற்றிய சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியவற்றுக்கெல்லாம் புறம்பாக இறைமையுடன் 'இணைந்ததான ஒரு உலக அறம்' - 'முறைமை' என்பது பற்றி அவர் தனியாக ஊழ் அதிகாரத்திற் பேசவந்தார் என்று கொள்வதற்கு அவசியம் இருப்பதாகத் தெரியவிலலை. அதுவும் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் சிந்திப்பதுபோல 'அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து (Mystic Conception) என்ற நிலையில் வள்ளுவரின் ஊழ் அமைந்துள்ளது என்பது பொருந்துவதாகவும், தெரியவில்லை. தமது காலத்தின் பண்பாட்டு விழுமியங்கள் அனைத்திலும் துறைபோன புலமை எய்தியிருந்த வள்ளுவர் மக்கள் மத்தியில் நிலவிய Mystic Conception ஒன்றை விளக்க ஒரு அதிகாரம் அமைத்தார் எனச் சிந்திப்பது அவரது மேதைமைக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை. அவ்வாறு ஊழ் என்ற அதிகாரத்தில் அவர் (வள்ளுவர்) உணர்த்திநின்ற கருத்துக்கள் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படத்தக்க உள்ளடக்கம் உடையன என்று கொள்வதற்கும் இல்லை. அதில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் மனிதனின் செயலூக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றனவேயன்று - எப்படி முயன்றாலும் ஊழ் இன்றி எதுவும் ஆகாது எனச் சோர்வடையவைப்பனவேயன்றி - அவனது இயல்பூக்கத்தைத் தூண்டுவனவாக இல்லை என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. மேலும் ஊழ்அதிகாரம் செல்வந்தரை நோக்கிக் கூறப்பட்டது என்ற டாக்டர் எஸ். இராமகிருஷ்ணனின் கருத்து[28] ஒரு ஆய்வு நிலை ஊகமே தவிர சான்று பூர்வமான முடிவு அல்ல.

இவற்றையெல்லாம் சிந்திக்கும் போது வள்ளுவர் தமது காலத்தில் மக்களின் பொதுவழக்கில் நிலவிய ஊழ்வினை என்ற கருத்தை விடுத்து வேறொரு முறைமையை ஊழ் என்பதாற் சுட்டினார் என்பது வலிந்து கோடல்போலத் தெரிகிறது. அன்றியும், ஊழ்வினைக்குப் புறம்பான மற்றொரு உலக முறைமையும் மனிதனைக் கட்டுப்படுத்துகிறது என்ற கருத்தைத் தான் வள்ளுவர் கொண்டிருந்தார் என்ற முடிவு செய்வதால் வள்ளுவத்துக்குத் தனிச்சிறப்பு எதும் வந்துவிடப்போவதும் இல்லை. ஏனெனில் வினைப்பயன் கோட்பாட்டில் மனிதப்பண்பு வளர்ச்சிக்கு சிறிதளவேனும் - இனியேனும் தீவினைக்கு அஞ்சி நல்வினையில் ஈடுபடத்தூண்டும் அளவுக்கு - இடம் உண்டு. அதைவிடுத்து 'முறைமை' என்று விளக்கம் தருவதால் பண்புவளர்ச்சிக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறாகச் சிந்திக்கும் போது வள்ளுவரின் ஊழ்தொடர்பான சிந்தனை ஊழ்வினை தொடர்பானதே என்ற முடிவே எய்தப்படுகின்றது.

> ''அறிஞர் பலர் திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாடு பற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கூறினும் பெரும்பாலானோர் ஊழ் என்பதற்குப் பரிமேலழகர் கூறும் விளக்கத்தை ஏற்று, ஒருவனது இன்றைய செயலின் பலன் நாளைய ஊழாக இம்மையிலும் பயன் தரலாம் என்றும்

வினையைச் செய்தவன் பயனைத் துய்த்தே தீரவேண்டும் என்றும் கூறி இதுவே திருவள்ளுவர் கருத்தென்றும் விளக்குகின்றனர்''[29]

என டாக்டர் பெ. சுப்பிரமணியன் தமது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளமையும் இத் தொடர்பில் நோக்கத்தக்கது.

குறள் கூறும் 'ஊழும் முயல் திறனும்' — முரண் நிலை

''ஊழ்'' அதிகாரத்திலே ஊழின் வல்லமையை முயற்சித்திறனால்—ஆள்வினைத் திறனால்—வெல்லுதல் சாலும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலை
வின்றித்
தாழாது உஞற்று பவர்'' (620)

என்ற குறள் ஊழ்வலிமைக்கு நேரடி எதிர்க் குரலாகவே அமைவதை அவதானிக்கலாம். சோர்வின்றித் தொடர்ந்து முயல்வோர் ஊழையும் புறமுதுகிடச் செய்வர் என்பது இதன் தொனிபொருள்.

''கூற்றம் குதித்தலும் கை கூடும் நோற்
றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு'' (269)

''தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'' (396)

ஆகிய குறள்களும் ஊழ்வலியை மறுதலித்து நிற்பன என்பது தெளிவு. (தவ) முயற்சியால் யமனையும் வெல்லலாம் என்பதும் (கல்வி) முயற்சியால் அறிவு ஊறும் (பெருகும்) என்பதும் ஆகூழ், போகூழ் போன்றவற்றின் அடிப்படையையே ஆட்டங்காணச் செய்வன.

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்
செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'' (169)

என்ற குறள் வள்ளுவரின் ஊழ் நம்பிக்கை தொடர்பாக மிகப்பெரும் ஐயத்தையே விளைவிப்பது.

இவற்றையெல்லாம் நோக்க வள்ளுவர் தமது கருத்துக்களில் தாமே முரண்படுகின்றார் என்ற எண்ணம் எழுவது இயல்பு. இவற்றை முரண்பாடு என்று கொள்வது வள்ளுவருக்கு இழுக்கேற்படுத்தும் என்ற எண்ணத்தினர் குறள்கள் அமைந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டிச் சமாதானம் கூறுவர். வள்ளுவரின் இலக்கிய உத்திகளுள் இத்தகையனவும் அமைகின்றன என்போரும் உளர். மேற்குறித்தவற்றுள் ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' என்ற குறளுக்கு டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி அவர்கள்,

''போரில் பகைவரை அழிப்பது வேறு; புறங்காண்பது வேறு; அழிந்த பகைவரான் அப்பொழுது நற்பயனோ அற்பயனோ நேராதென்றாலும் பின்னொருகால் அவற்றுளொன்று நேரலாம். ஆனால் அப்பொழுது அவர் அடங்கியொழுகுபவராகலின் அவரால் அப்பொழுது நற்பயனோ அற்பயனோ நேராது என்று கொள்வது பொருத்தமேயன்றோ. இவ்வேறுபாட்டையுணர வல்லார் ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' என்று கூறப்பட்ட கருத்து ஊழிற்பெருவலியாவுள என்ற கருத்துக்கு முரண்பட்டதன்று என்பதைத் தெளிய உணரலாம்''[30]

என்று முரணின்மை காட்ட முயல்கிறார். டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் ஊழ் அதிகாரம் செல்வந்தரையும் ஆள்வினையுடைமை அதிகாரம் பாட்டாளி மக்களையும் நோக்கி அமைந்தன என்று வேறு வேறு நிலைகளைக் கற்பிப்பதன் மூலம்[31] வள்ளுவரில் முரணின்மை காட்ட விழைகிறார் சாமி. சிதம்பரனார் அவர்கள்,

''வள்ளுவர் ஊழை மறுக்கவில்லை; அதனை எதிர்க்க வழிகாட்டுகிறார்.''[32] என்பர். டாக்டர் இரா. வேலு அவர்கள்.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டினதும் அடிப்படைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம் மேற்படி முரண் நிலைச் சிந்தனையில் புதிய கருத்துப் பரிமாணத்தைத் தருகின்றார். அவர், ''அறத்துப்பால் காலங்கடந்து பயனைக் கொடுப்பது பொருட்பால் உடனுக்குடன் பயன் தருவது'' என்ற வகையில் சிந்தித்துள்ளார். ஊழ் தொடர்பான வள்ளுவரது நிலைப்பாடு பற்றி அவர் தரும் விளக்கம் வருமாறு.

> ''இந்தியக் கொள்கையான விதிக் கொள்கை சங்ககாலச் சமுதாயத்தில் வேரூன்றியிருந்தது. வள்ளுவர் அக்கொள்கையை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அதன் விளைவாக மக்கள் உள்ளத்தில் சோம்பல் நிலைகொள்வதை அவர் விரும்பவில்லை. அதனால் ஊழையும் ஆள் வினையால் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் (கு.620) முயற்சிக்குத் தக மெய்வருத்தக் கூலிதரும் (கு. 619) என்ற குறிக்கோளையும் வலியுறுத்துகிறார்... ஊழுக்கு முதன்மை கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வள்ளுவருக்கு இருந்திருந்தால் செயல் முறைப்பகுதியான பொருட்பாலில் ஆள்வினைக்கு முதன்மையும் சிறப்பும் கொடுத்து மக்கள் மனத்தை வலிமையாக்கியிருக்க மாட்டார். ஊழ்க் கொள்கை வள்ளுவரிடம் வன்மைபெறவில்லை. அறத்துப்பாவில் கூறும் கருத்துக்கள் எல்லாம்செயற்பாட்டுக் கொள்கையெனக் கொள்ளல் இயலாது. ஆனால், பொருட்பாலில் விளக்கும் கொள்கைகள் எல்லாம் அரசன் செய்ய வேண்டிய செயல்களை வலியுறுத்துகின்றன அறத்துப்பால் காலங்கடந்து பயனைக் கொடுப்பது: பொருட்பால் உடனுக்குடன் பயனைத் தருவது''[34]

டாக்டர் இரா. வேலு அவர்களின் இந்த விளக்கம் தெளிவானதாகவும் மேலும் சிந்தனையைத் தூண்டவல்லதாகவும் அமைந்துள்ளது. சாமி சிதம்பரனாரின் மேற்சுட்டிய எண்ணக்கருவின் தருக்கரீதியான விரிந்த விளக்கமாகவும் இதனைக் கருத முடியும்.

### சிந்தனை வரலாற்றில் திருப்புமுனை

திருப்புமுனை என்பது முன்னரே அமைந்திருந்த ஒரு எண்ணப்போக்கிலிருந்து – முன்னர் (இதுவரை) நடந்து வந்த பாதையினின்று – வேறொருபாதையை நோக்கித் திரும்பும் இடத்தின் மையப் புள்ளி ஆகும். உலக வரலாற்றில் பல்வேறு மாமனிதர்கள் திருப்புமுனைகளாகத் திகழ்ந்துள்ளனர். கௌதமபுத்தர் முதல் கார்ல் மாக்ஸ் வரை இத்தகையோர் பெயர்வரிசை விரியும். இத்தகையோர் வரிசையில் தனிக் கவனம் செலுத்தப்படத்தக்க வரலாற்றுமாமனிதராகத் திருவள்ளுவர் திகழ்கிறார் என்பதை மேலே நாம் இதுவரை நோக்கிவந்த 'ஊழ்' அடிப்படையில் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

வள்ளுவர் தமக்கு முற்பட்ட காலத்தின் மரபுகளைச் சுமந்தவர்; தமது காலச் சூழலில் தமிழகத்தில் முட்டிமோதிநின்ற பல்வகைச் சமயதத்துவச் சிந்தனைகளைக் கற்றுணர்ந்து அவற்றுள் எதனுடனும் முழுநிலை உடன்பாடுகாணாமல் தம்வழியில் 'மெய்ப்பொருள்' கண்டவர்; காட்டியவரும் கூட. அக்காலப்பகுதியில் இந்திய சமய – தத்துவப்பிரிவுகள் பலவற்றிலும் செல்வாக்குச் செலுத்திநின்ற ஊழ்வினை தொடர்பான சிந்தனைகள் வள்ளுவரையும் பாதித்துள்ளன. அக்கால முடியாட்சிச் சூழலில் அக் கோட்பாடு தவிர்க்கவியலாததொன்றாகவும் இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். ஏனெனில் சமுதாய வரலாற்றுப்போக்கிலே நிலவுடைமை வர்க்கமும் முடியாட்சியும் உருவான காலகட்டத்தில் அதற்குக் கவசமாக உருவான சிந்தனையே ஊழ்வினைக் கோட்பாடு என்பது வரலாற்றறிஞர் பலரது கருத்தாகும். அதாவது உடைமையும் அதிகாரமும் கொண்டிருந்த வர்க்கங்கள் தமது ஆட்சிக்குட்பட்டிருந்த வர்க்கத்தினரை நிரந்தரமாக அடக்கிவைத்திருக்கப் பயன்படுத்திய

ஆயுதமே - உனது இன்றைய நிலைக்கு உனது முன் வினையே காரணம் என்ற - ஊழ்வினைக்கோட்பாடு ஆகும். வள்ளுவர் தமது கால சமய, தத்துவ, முடியாட்சிச் சூழல்களில் இந்தக் கோட்பாட்டைக் கொள்கை அளவிலாவது ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்திருப்பார் என்பதனை நாம் ஊகத்தாற் கொள்ள வேண்டியது அவசியம். சமுதாயத்துக்குப் பயன் படத்தக்க உயரிய கருத்துக்கள் பலவற்றைக் கூறவந்த வள்ளுவருக்கு அந்தச் சமுதாயத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள இந்த 'கொள்கையளவிலான ஊழ்வினை ஏற்பு' அவசியமாக இருந்திருக்கலாம். அவர் ஊழ் என்ற சிந்தனைக்குத் திருக்குறளில் தந்துள்ள இடத்துக்கு (ஊழ் அதிகாரத்துக்கு) நாம் இப்படி அமைதி காண முயலலாம். இந்திய மரபிலே மக்கள் துயருக்கு தீர்வுகாணப்புறப்பட்ட முதல்வரெனத்தக்க கௌதம புத்தர் ஊழ்வினைச் சிந்தனைக்கு உட்பட்டிருந்தவராகவே அறியப்படுகிறார் என்பது இங்கு நாம் தொடர்புபடுத்திச் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

இவ்வாறு ஊழைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட வள்ளுவரால் அதனை முழு மனதோடு அங்கீகரிக்க முடியவில்லை என்பதைப் பல குறள்கள் காட்டுவன. சமகாலத்திலே நல்லோர் பலர் துன்புறுவதையும் தீயோர் சுகபோகவாழ்வு பெறுவதையும் அவர் அவதானித்துள்ளார் (முற்சுட்டிய) 'அவ்விய நெஞ்சத்தானாக்கமும்' என்ற குறள் (169) இதற்குச்சான்று. இந்த நிலைகளுக்கு ஊழில் அவர் அமைதிகாணமுற்படவில்லை. முற்பட்டிருப்பின் அக்குறளின் இறுதித் தொடர் 'விதியாற்படும்' என்பதாக அல்லது 'ஊழற்படும்' என்பதாக அமைந்திருக்கும். அவ்வாறு அமையாமல் 'நினைக்கப்படும்' என அமைந்து அக்குறள் நிறைவெய்துகின்றது. இதன் தெளிபொருள் 'ஆராயத்தக்கது' அல்லது 'ஆராயப் படவேண்டியது' என்பதாகும். இவ்வாறான சமுதாயப் பிரச்சினைகள் ஆராயப் படத்தக்கன என்று வள்ளுவர் சிந்தித்ததே அன்றைய ஊழ்வலிக்கோட்பாட்டுச்சூழலில் பெரியதொரு 'சிந்தனைமாற்றம்' அல்லது 'சிந்தனைப்பாய்ச்சல்' எனலாம்.

வள்ளுவரின் சிந்தனை இந்த மாற்றம் அல்லது பாய்ச்சலுடன் மட்டும் அமையவில்லை. சமூதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கு, அதாவது பிச்சை எடுத்தேனும் ஒருவன் உயிர்வாழ வேண்டும் என்று நிலவும் சூழ்நிலைக்கு யார் காரணமோ அவன் அலைந்து கெட்டு அழிந்து போகட்டும் என்ற அளவுக்கு அவரது சிந்தனை சென்றிருக்கின்றது.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' (1062).

என்ற குறளின் தெளிபொருள் இதுவே. இதில் 'உலகியற்றியான்' என அவரால் சுட்டப்பட்டவனை இறைவனாகவோ அன்றேல் அரசனாகவோ எவ்வாறு பொருள் கொண்டாம் சிந்தனையிலுன் அடிப்படையில் மாற்றம் ஏற்படாது. அதாவது சுரண்டலுக்கும் துன்பத்துக்கும் காரணமான இந்த சமூக அமைப்பு மாற்றமடைய வேண்டும் என்பதே இக்குறளின் ''தொனி'' ஆகும். படைத்தவன் அல்லது ஆள்பவன் மாறினாலாவது இந்த அவலம் மாறாதா? என்ற வள்ளுவரின் அடிமன எதிர்பார்ப்பு இக்குறளில் புலப்பட்டுள்ளது.

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது வள்ளுவரின் 'ஊழ், பற்றிய நிலைப்பாட்டைப் பின்வருமாறு தெளிந்து கொள்ளலாம்,

அ) ஊழ்வலிக் கோட்பாட்டைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆ) சமூதாயப் பிரச்சினைகள் — ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள் — என்பவற்றுக்கான அடிப்படைகளை ஆராய முற்பட்டுள்ளார்.

இ) சமூதாயத்தின் அவலங்கள் தீர்க்கப் பட வேண்டுமானால் அச்சமுதாயத்

லதைப் படைத்தவனை அல்லது ஆள்பவனை மாற்றலாம் என்ற அளவுக்கு அவர் சிந்தனை சென்றுள்ளது. இதிலே சமுதாய மாற்றத்துக்கான எண்ணக் கருவை உய்த்துணர முடியும்.

இவ்வாறான அவரது நிலைப்பாடுகளே 'ஊழையும் உப்பக்கம் காணலாம்' என்ற வகையில் மனிதமுயற்சியை உயர்த்திப் பேசும் குறள்களின் தோற்றத்துக்கு அடிப்படைகள் என்பது உய்த்துணரற்பாலது.

திருக்குறள் ஒரு திருப்புமுனை ஆக அமைந்த நிலை இதுதான். முடியாட்சிச் சூழலில் ஊழ் நம்பிக்கை வலுப்பெற்றிருந்த சமுதாயத்தளத்தில் நின்று சமூகத்தின் அடிநிலை மனிதனின் அவலம் தீர்வதற்காக வழிகாட்ட முற்பட்ட வகையில் இந்தத் திருப்பநிலை தெளிவாகத் தெரிகிறது. வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் (கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பகுதியில்) தமிழ் இலக்கியப்பரப்பில் மட்டுமல்ல அனைத்திந்திய சிந்தனைப்பரப்பிலும் வள்ளுவர் முன் வைத்த சமுதாய மாற்ற எண்ணக்கரு கொண்ட சிந்தனை அமைந்திருந்தமைக்குச் சான்றிருப்பதாகத் தெரியவில்லை. சமுதாயத்தின் – மனிதனின் – துன்பங்களுக்கு நிவாரணம் தேடமுற்பட்ட கௌதமபுத்தரும் கூட சமுதாய மாற்றத்தை அவாவி நின்றார் என்று வாதிட இடமிருப்பதாகத் தெரியவில்லை. மேல்நாட்டில் கடந்த நூற்றாண்டில் தான் சமுதாய மாற்றம் என்ற சிந்தனை பொதுவுடைமைக் கொள்கையூடாக ஒரு தெளிவான வடிவத்தைப் பெற்றதாகத் தெரிகிறது. இவற்றை நோக்கும்போது திருக்குறள் ஏற்படுத்திய திருப்புமுனையின் வரலாற்று முதன்மை உறுதிப்படும்.

## அடிக்குறிப்புகள்


1. Albert Schweitzer. *Indian Thought and Its Development*, Wilco Publishing House, Bombay 1960 p. 199

2. சென்னைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி. தொகுதி I பகுதி II சென்னைப் பல்கலைக்கழகம். சென்னை. 1956. ப. 50

3. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி. 5. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1987. பக் - 653 - 654.

4. சுப்பிரமணியன், பெ. ''பழந்தமிழ் நூல்களில் ஊழ்'' டாக்டர் பட்ட ஆய்வேடு; சென்னைப் பல்கலைக்கழகம் 1989. பக் 9 - 12

5. லஷ்மணன், கி. இந்திய தத்துவஞானம் 4ம்பதி, பழனியப்பா பிரதர்ஸ். சென்னை. 1987 பக். 28.

6. சாங்கிருத்தியான், ராகுல். இந்து தத்துவ இயல். தமிழாக்கம் ஆர். பார்த்தசாரதி. நியு செஞ்சுரி புக்ஹவுஸ். சென்னை 1985. பக். 27 - 28.

7. வாழ்வியற் களஞ்சியம் மு. நூ. மு. ப

8. பார்க்க: சாரங்கபாணி, முனைவர், இரா. திருக்குறள் உரைவேற்றுமை அறத்துப்பால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். 1989. பக். 538.

9. மேற்படி.

10. மேற்படி.

11. மாணிக்கம் டாக்டர். வ. சுப. வள்ளுவம் பாரிநிலையம். சென்னை. 1956. ப. 349.

12. மேற்கோள்: பார்க்க: சாரங்கபாணி முனைவர். இரா. மு. நூ. மு. ப.

13. இராமகிருஷ்ணன், டாக்டர் எஸ். திருக்குறள்: ஒரு சமுதாயப்பார்வை மீனாட்சி புத்தகநிலையம். மதுரை 1980 ப. 56

14. மேற்படி ப. 73.

15. மேற்படி ப. 57.

16. வரதராசன். டாக்டர். மு. திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம். பாரிநிலையம் சென்னை. 1956 ப. 410.

17. அப்பாதுரை, பன்மொழிப்புலவர். கா. தென்னகப்பண்பு - மலர் நிலையம் சென்னை 1961. ப. 446.

18. பார்க்க: சாரங்கபாணி, முனைவர் இரா. மு. நூ. ப. 541

19. மேற்படி.

20. மேற்படி.

21. மேற்படி ப. 543

22. மேற்படி ப. 544

23. மேற்படி ப. 538

24. பார்க்க. மேற்கோள். மேற்படி: 545

25. மேற்படி

26. பார்க்க: அடிக்குறிப்பு இல. 15

27. மேற்படி

28. மேற்படி ப. 75

29. சுப்பிரமணியன், பெ. மு. ஆ. ப. 161

30. தூரை அரங்கசாமி, டாக்டர் மொ. சு. குறளில் முரணா? தமிழ்ப்புத்தகாலயம். சென்னை. 1979 ப. 9

31. இராமகிருஷ்ணன், டாக்டர் எஸ். மு. நூ. பக். 75. 78

32. சிதம்பரனார், சாமி வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் சென்னை. 1964, ப 257

33. வேலு, டாக்டர், இரா திருக்குறள் - கௌடலியம் ஒப்பாய்வு அறம் பதிப்பகம் மதுரை 1989. ப. 257

34. மேற்படி.